ந.க.எல்.1/13309 /2021

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்.
நாள்:11.09.2021.

## பத்திரிகைச் செய்தி

நீலகிரி மாவட்டத்தில் வாக்குச் சாவடிகளை மறுசீரமைப்பு செய்யும் பணி (**Rationalization of Polling Station**) கடந்த 25.08.2021 முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தற்போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம், கூடலூர் (தனி) மற்றும் குன்னூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்ட வரைவு வாக்குச் சாவடிகளின் பட்டியல்கள் (**Draft list of Polling Stations**) மற்றும் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான பிரேரணைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் உதகமண்டலம், சார் ஆட்சியர் அலுவலகம் உதகமண்டலம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் கூடலூர், சார் ஆட்சியர் அலுவலகம் குன்னூர், வட்டாட்சியர் அலுவலகம் உதகமண்டலம், குந்தா, கூடலூர், பந்தலூர், குன்னூர், கோத்தகிரி, மற்றும் நகராட்சி ஆணையாளர் அலுவலகம் உதகமண்டலம், குன்னூர் ஆகிய இடங்களில் பொது மக்களின் பார்வைக்கு விளம்பர பலகையில் இன்று 13.09.2021 முதல் அறிவிப்பு செய்யப்படுகிறது.

இதில் ஏதேனும் ஆட்சேபணைகளோ, கருத்துக்களோ இருப்பின் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக வரும் 19.09.2021-க்குள் தெரிவிக்கலாம் என நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஒம்/- ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப
மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்.

/உ.ந.உ.ப/

13/9/2021

மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்.

13.9.2021